இருக்கின்றன. சில பஸ்களில் ஸ்டெப்னி இருக்கிறது; ஜாக்கி இருக்கிறது; ஆனால் 'வீல் ஸ்பானர்'—டயரைக் கழற்றக்கூடிய சாதனம் இல்லை. கடந்த வாரம் தூத்துக்குடியிலிருந்து மதுரைக்கு வந்துகொண்டிருந்த ஒரு பேருந்தில் 'வீல் ஸ்பானர்' மட்டும் இல்லாததால் இரண்டு மணி நேரம் வழியிலே நிற்கவேண்டி வந்தது. ஒரு டயர் பஞ்சர் ஆகிவிட்டது. வீல் ஸ்பானர் இல்லாததால் அதைக் கழற்றி மாற்ற முடியவில்லை. அதனால் பிரயாணிகள் பெரிதும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. எனவே, பழுது பார்ப்பதற்குரிய எல்லா சாதனங்களையும் பஸ்சில் வைத்திருக்கச் செய்து, இந்த மாதிரியான சிறிய சிறிய குறைபாடுகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இங்கொன்றும் அங்கொன்றுமாக இத்தகைய சிறு குறைபாடுகள் அரசின் கவனத்திற்கு வந்துகொண்டிருக்கின்றன. அதனால் நீண்ட தூர விரைவுப் பேருந்துகளை சரியாகப் பராமரிப்பதற்காக—முழுக் கவனம் செலுத்தக்கூடிய வகையில் அதற்கென்று தனியாக ஒரு வாரியத்தை அமைக்கலாம் என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

புன்னப்பாக்கத்திற்குப் பேருந்துப் பணி

*** 355 வினா—திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வழித்தடம் எண் 101-எ பேருந்தினை திருவள்ளூர் வட்டம், புன்னப்பாக்கம் கிராமம் வரை நீட்டிக்கும் செயற்குறிப்பினை நிறைவேற்றுவதில் மேலும் காலதாமதம் ஏன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: புன்னப்பாக்கத்திற்குச் செல்லும் சாலையின் மேற்பரப்பு சமமற்றதாய் இருப்பதோடு, அச்சாலையில் திடீரெனத் திரும்புகிற இரண்டு குறுகிய வளைவுகளும் உள்ளன. மேலும் இரு வழிகளிலும் பேருந்துகள் போய் வருவதற்கேற்றவாறு இச்சாலை போதுமான அளவு அகலமானதாக இல்லை.

*** 356 வினா—திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வழித்தடம் எண். 98-ஐ, திருவள்ளூர் வட்டம், புன்னப்பாக்கம் வரை நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

1973 நவம்பர் 23]

(இ) ஆம் எனில், எப்போது நீட்டிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) புன்னப்பாக்கம் கிராமத்திற்குச் செல்லும் சாலை, பேருந்துப் போக்குவரத்துக்கு ஏற்றதாக இல்லை. எனவே 98-ம் எண் வழித்தடத்தை திருப்பி விடுவதோ நீட்டிப்பதோ சாத்தியமில்லை.

எண்ணெய் ஆலைகள் தொடக்கம்.

*357 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர்-கிராம தொழில் வாரிய பிரிவின் மூலம் எண்ணெய் எடுக்கும் ஆலைகளைத் தொடங்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: எண்ணெய் எடுக்கும் ஆலைகளைத் துவங்கும் திட்டம் ஏற்கனவே பரிசீலனையில் இருந்து, அதற்கு அறிக்கையும் சமர்ப்பித்தார்கள். ஒருவேளை அது கைவிடப்பட்டது என்றால் அவ்வாறு கைவிட்டதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் அரிசித் தவிட்டிலிருந்தும், செக்குப் புண்ணாக்கிலிருந்தும் எண்ணெய் எடுக்கும் திட்டம் மேற்கொள்வதாக இருக்கிறது. அப்படிப்பட்ட திட்டம் நாமக்கல் பகுதியில் முதலாவதாக ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

*358 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர்-கிராம வாரியத்தின் மூலமாக எண்ணெய் தயாரிப்புக்கென மின் விசையில் இயங்கும் செக்குகளை அறிமுகப்படுத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?